**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி</u>**

**<u>S.C.No.56/2020</u>**

தேதி – 17.02.2026

(அ.சா.5 ) – திரு. பாண்டி

**<u>2ம் எதிரி ஆஜர்</u>**

சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

1. என்னுடைய சொந்த ஊர் பாலசமுத்திரம். பிரச்சனை நடந்ததாகச் சொல்லப்படும் கால கட்டத்தில் பழைய ஆயக்குடியில் குடியிருந்தேன். பழனி அடிவாரத்தில் உள்ள குறும்பர் மடத்தில் நான் ஒரு நிர்வாகி என்றால் சரிதான். அந்த மடத்தில் ஒரு ஊருக்கு 5, 6 பேர் நிர்வாகிகளாக உள்ளோம். அந்த மடத்தில் மொத்தம் பொருளாளர், செயலாளர் என 5,6 பேர் பொறுப்பில் இருக்கிறார்கள். நான் பொறுப்பில் இல்லை. நிர்வாகியாக உள்ளேன். குறும்பர் மடத்திற்கு நான் அடிக்கடி சென்று வருவேனா என்றால் வேலை இருந்தால் சென்று வருவேன். சம்பவம் நடந்ததாகச் சொல்லும் நாளில் நான் எங்கு இருந்தேன் என்றால் ஆயக்குடியில் இருந்தேன்.

2. எனக்கு சம்பவம் பற்றி யார் தகவல் சொன்னார்கள் என்றால் அ.சா.2 தகவல் காலை சுமார் 11.00 மணிக்குச் சொன்னார். நான் 11.00, 11.30 மணிக்கு மேற்படி மடத்திற்குச் சென்றேன். என்னுடன் வேறு யாரும் வரவில்லை, நான் பைக்கில் தனியாக அங்கு சென்றேன். மடத்தில் மின் தடை ஏற்பட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பிரச்சனை என்று சொன்னார்கள். பிரச்சனை செய்து தேவி என்பவரை அடித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். வேறு விபரம் எனக்குத் தெரியாது.

3. நான் தேவி என்பவரை அழைத்துக்கொண்டு அடிவாரம் காவல் நிலையம் சென்றேன். 2.45 மணிக்கு மேல் காவல் நிலையம் சென்றோம்.

மேற்படி மடத்திலிருந்து காவல் நிலையத்திற்கு 5 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான், குத்தினார்கள் என்றவுடன் உடனடியாக நாங்கள் காவல் நிலையம் சென்றுவிட்டோம். அந்த மடத்தின் அருகில் பொதுமக்களின் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். அந்த மடத்தைச் சுற்றி கடைகள் இருக்கிறது. வணிக வளாகங்கள் இருக்கிறது என்றால் சரிதான். வாகனங்கள் அதிகம் சென்று வரும் பகுதி என்றால் சரிதான்.

4. காயம்பட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்த விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு நானும், அ.சா.2 தேவியும் சென்றோம். ஆஜர் 2ம் எதிரி எத்தனை வருடங்களாக கடை நடத்தி வருகிறார் என்றால் சரியாகத் தெரியவில்லை. தற்போது ஆஜர் 2ம் எதிரி மடத்தின் எதிர்ப்புறத்தில் கடை நடத்தி வருகிறார் என்றால் தெரியவில்லை. முதலில் மடத்தின் அருகில் கடை நடத்தி வந்தார். 1ம் எதிரி மண்டபத்தின் அருகில் தற்போது வரை கடை நடத்தி வருகிறார் என்றால் எனக்குத் தெரியவில்லை.

5. மண்டபத்தில் உள்ள கடைகளுக்கு ஆண்டுதோறும் வாடகை அதிகரிக்கப்பட்டது எனக்குத் தெரியுமா என்றால் தெரியும், நிர்வாகிகள் சொன்னார்கள். காயம்பட்டதாகச் சொல்லப்படும் கிருஷ்ணசாமியும், அவரது குடும்பத்தினரும் முதலில் ஆயக்குடியில் குடியிருந்தார்கள் என்றால் சரிதான், 10, 12 வருடங்களாக மடத்தில் குடியிருக்கிறார்கள். நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்றும், 2வது எதிரியை கடையை காலி செய்யவைக்கவேண்டும் என்பதற்காக பொய்யாகக் கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. புகாரை யார் எழுதினார்கள் என்றால் வாய்மொழியாகச் சொன்னவுடன் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்கள். புகாரை யார் எழுதினார்கள் என்று எனக்குத் தெரியாது. எனக்கு சம்பவத்தைப் பற்றி தெரியாது என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை :–</u>** **இல்லை.**

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2026.02.17 17:07:09 +0530

Additional Sub Judge,
Palani.